**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஏ1)துறை**

அரசாணை (நிலை) எண் : 24 நாள் .22 .02.2021.
சார்வரி வருடம், மாசி – 10,
திருவள்ளுவர் ஆண்டு – 2052.

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்137, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 09.11.2015.
2. அரசாணை (நிலை) எண்143, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 19.10.2020.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.26308/2020 பொவிதிமு2, நாள் 12.01.2021.

----

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு ஊதிய விகிதங்கள் மறுநிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

2. தமிழ்நாடு கூட்டுறவு ஊழியர் சம்மேளனம் மற்றும் இதர சங்கங்களின் கோரிக்கையை ஏற்று கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு ஊதிய உயர்வு தொடர்பாக பரிந்துரைகளை வழங்கிட மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கூடுதல்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அவர்களை குழுத் தலைவராகவும் மற்றும் ஏழு உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. அதனடிப்படையில் ஊதிய சீரமைப்புக் குழு தனது பரிந்துரைகளை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு சமர்ப்பித்தது. பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் ஆகியோர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது குறித்து பரிசீலித்து பின்வரும் பரிந்துரைகளை அளித்துள்ளார்:-

| தற்போதைய நிலை | குழுவின் பரிந்துரை | உயர்வு/ செலவினம் | கூட்டுறவு சங்க பதிவாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| **ஊதியக்கற்றை நிர்ணயம்**<br>**1. விற்பனையாளர்கள்**<br>ரூ.4300 – ரூ.12000/– | ரூ.8600 –ரூ.29000/–வரை | –– | பரிந்துரைத்துள்ளார் |

| | | | |
|---|---|---|---|
| கட்டுநர்கள்<br>ரூ.3900 – ரூ.11000/–<br>(பணியில் சேர்ந்த ஓராண்டிற்குப் பின்னர்) | ரூ.7800– ரூ.26000/– வரை | –– | பரிந்துரைத்துள்ளார் |
| 2.புதிய விகிதத்தில் அடிப்படை ஊதிய நிர்ணயம் செய்தல்<br><br>விற்பனையாளர்கள்<br>ரூ.8600 /– | ரூ.9460/– தற்பொழுது ஓராண்டு பணி நிறைவு செய்த பணியாளர்களுக்கு, அவர்கள் தற்போது பெற்று வரும் அடிப்படை ஊதியத்துடன் 100% அகவிலைப்படி சேர்த்து வரும் கூடுதலுக்கு 10% ஊதிய உயர்வு அளித்து, புதிய அடிப்படை ஊதியம் கணக்கிடலாம் என குழு பரிந்துரைத்துள்ளது. | ரூ.860/– | பரிந்துரைத்துள்ளார் |
| கட்டுநர்கள்<br>ரூ.7800 /– | ரூ.8580/– | ரூ.780/– | பரிந்துரைத்துள்ளார் |
| 3. புதிதாக நியமிக்கப்படும் விற்பனையாளர்கள் / கட்டுநர்களுக்கான ஊதிய நிர்ணயம்<br>கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் புதியதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்த ஒருவருடம் மட்டும் பின்வருமாறு தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது.<br>விற்பனையாளர்கள்<br>ரூ.5000/–<br><br>கட்டுநர்கள் ரூ.4250/– | தொகுப்பூதிய முறையை இரத்து செய்து புதிதாக பணியில் சேர்ந்தவர்களுக்கும் பணியில் சேர்ந்த நாள் முதல் புதிய ஊதியக்கற்றையில் காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.<br><br>விற்பனையாளர்கள்<br>ரூ.8600– ரூ.29000/–<br><br>கட்டுநர்கள்<br>ரூ.7800 – ரூ.26000/– | –– | பரிந்துரைத்துள்ளார் |
| 4.அகவிலைப்படி<br>விற்பனையாளர்கள்/ கட்டுநர்கள்<br>தற்போது அடிப்படை ஊதியத்தில்114% அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது உயர்த்தி வழங்கப்படும் | புதிதாக நிர்ணயிக்கப்படக் கூடிய அடிப்படை ஊதியத்தில் 14% அகவிலைப்படி பெற அனுமதிக்கப்படுகிறது. திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அரசு அறிவிக்கும் அகவிலைப்படி உயர்வை இப்பணியாளர்களுக்கும் வழங்கலாம் என குழு பரிந்துரை செய்துள்ளது. தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 114 சதவீதத்தில் 100% அகவிலைப்படி | –– | பரிந்துரைத்துள்ளார் |

<table>
<tr>
<td>அகவிலைப்படி விகிதத்தினையும் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.</td>
<td>அடிப்படை ஊதியத்துடன் சேர்க்கப்பட்டு வரும் கூடுதலுக்கு 10% ஊதிய உயர்வு அளித்து புதிய அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள 14% புதிய அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப்படியாக ஊதிய நிர்ணய நாள் முதல் அளிக்க குழு பரிந்துரை செய்துள்ளது.</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td><u>5. ஆண்டு ஊதிய உயர்வு</u><br>ஆண்டு ஊதிய உயர்வு 2.5%</td>
<td>ஆண்டு ஊதிய உயர்வு அடிப்படை ஊதியத்தில் 2.5%-லிருந்து 3% ஆக உயர்த்தி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.</td>
<td>--</td>
<td>பரிந்துரைத்துள்ளார்</td>
</tr>
<tr>
<td><u>6. வீட்டு வாடகைப்படி</u><br>வீட்டு வாடகைப்படி அடிப்படை ஊதியத்தில் 10%</td>
<td>அடிப்படை ஊதியத்தில்10%<br>(அ)
<table>
<tr><td colspan="2">விற்பனையாளர்</td><td colspan="2">கட்டுநர்</td></tr>
<tr><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர பகுதிகள்</td><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர பகுதிகள்</td></tr>
<tr><td>ரூ.1200/–</td><td>ரூ.1000/–</td><td>ரூ.1000/–</td><td>ரூ.800/–</td></tr>
<tr><td colspan="4">இதில் எது குறைவோ அதை வழங்கலாம்</td></tr>
</table>
</td>
<td>--</td>
<td>பரிந்துரைத்துள்ளார்</td>
</tr>
<tr>
<td><u>7. நகர ஈட்டுப்படி</u><br>சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடிப்படை ஊதியத்தில் 5% இதர மாநகராட்சி பகுதிகளில் அடிப்படை ஊதியத்தில் 4%</td>
<td>
<table>
<tr><td colspan="2">விற்பனையாளர்</td><td colspan="2">கட்டுநர்</td></tr>
<tr><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர மாநராட்சி</td><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர மாநகராட்சி</td></tr>
<tr><td>ரூ.600/–</td><td>ரூ.500/–</td><td>ரூ.500/–</td><td>ரூ.400/–</td></tr>
<tr><td colspan="4">இதில் எது குறைவோ அதை வழங்கலாம்</td></tr>
</table>
</td>
<td>--</td>
<td>பரிந்துரைத்துள்ளார்</td>
</tr>
</table>

<table>
<tr>
<td><u>8. நியாயவிலைக் கடைப் படி</u><br>சென்னை மற்றும் இதர மாநகராட்சிகளில் பணிபுரிபவர்களில் விற்பனையாளருக்கு ரூ.1000/– மற்றும் கட்டுநருக்கு ரூ.500/– கடைப் படியாகவும் இதர இடங்களில் பணிபுரிபவர்களுக்கு விற்பனையாளருக்கு ரூ.750/– மற்றும் கட்டுநருக்கு ரூ.375/–</td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை</td><td colspan="2">விற்பனையாளர்</td><td colspan="2">கட்டுநர்</td></tr>
<tr><td></td><td></td><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர மாநகராட்சிகள்</td><td>சென்னை மாநகராட்சி</td><td>இதர மாநகராட்சி கள்</td></tr>
<tr><td>1.</td><td>1000 மற்றும் அதற்கு குறைவாக</td><td>ரூ.1000/–</td><td>ரூ.500/–</td><td>ரூ.750/–</td><td>ரூ.375/–</td></tr>
<tr><td>2.</td><td>1001–1500</td><td>ரூ1250/–</td><td>ரூ.750/–</td><td>ரூ.1000/–</td><td>ரூ.500/–</td></tr>
<tr><td>3.</td><td>1501 மற்றும் அதற்கு மேல்</td><td>ரூ1500/–</td><td>ரூ.1000.–</td><td>ரூ1250/–</td><td>ரூ.750/–</td></tr>
</table>
குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கேற்ப கடைப்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
</td>
<td>--</td>
<td>பரிந்துரைத்துள்ளார்</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| நியாயவிலைக் கடைப் படியாகவும் வழங்கப்பட்டு வருகிறது. | | | |
| **9.மருத்துவப்படி** ரூ.100/– | அனைவருக்கும் மருத்துவப்படி ரூ.300/– (அரசு ஊழியர்களுக்கு இணையாக) | ரூ. 200/– | பரிந்துரைத்துள்ளார். |
| **10.மலைவாழ்ப்படி (ம) குளிர்காலப்படி** அரசால் மலைவாழ்பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மலைவாழ்ப்படி அடிப்படை ஊதியத்தில் 20% அல்லது அதிகபட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.1500/– ஆகவும் சராசரி கடல் மட்டத்திலிருந்து மலைவாழிட உயரம் (MSL)1000 மீட்டருக்குமேல் உள்ள பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு குளிர்காலப்படி அடிப்படை ஊதியத்தில் 5%அல்லது அதிகபட்சம் ரூ.400/– | மாற்றம் ஏதுமில்லை | –– | பரிந்துரைத்துள்ளார் |
| **11.மாற்றுத் திறனாளிப்படி** ரூ.2500/– | மாற்றம் ஏதுமில்லை | –– | பரிந்துரைத்துள்ளார் |
| **12.தேர்வு நிலை (ம) சிறப்புநிலை ஊதியம்** தற்போது 15.ஆண்டுகள் பணிமுடித்த | 15 ஆண்டுகளுக்கு பதிலாக 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு தேர்வுநிலையும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு சிறப்புநிலையும் வழங்கி தலா ஒரு ஊதிய உயர்வு (3%)அளித்து நிர்ணயிக்கலாம் என குழு பரிந்துரை | | பரிந்துரைத்துள்ளார் |

| | | |
|---|---|---|
| பணியாளர்களுக்கு தேர்வுநிலையில் ஓர் ஊதிய உயர்வு (அடிப்படை ஊதியத்தில் 2.5 சதவீதம்) அளித்து ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. | செய்துள்ளது.மேலும், 30 ஆண்டு பணிமுடித்த பணியாளர்களுக்கும் சிறப்பு ஊதிய உயர்வாக ஒரு ஊதிய உயர்வு (3%) அளித்து நிர்ணயிக்கலாம் எனவும் குழு பரிந்துரை செய்துள்ளது. | |

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஊதிய மறு சீரமைப்புக் குழுவின் பரிந்துரையினால் 23,793 பணியாளர்கள் (20,448 விற்பனையாளர்கள் மற்றும் 3,345 கட்டுநர்கள்) பயன் பெறுவார்கள் எனவும், நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு அவர்கள் பெற்று வரும் மொத்த சம்பளத்தில் சராசரியாக 19% முதல் 24% வரை கூடுதல் நிதிப்பயன் கிடைக்கும் எனவும், காலமுறை ஊதியம் பெற்று வரும் விற்பனையாளர்கள் குறைந்தபட்சமாக ரூ.2556/–ம் அதிகபட்சமாக ரூ.4000/–மும் சம்பள விகிதங்களில் கூடுதலாக பெறுவர் எனவும், காலமுறை ஊதியம் பெற்றுவரும் கட்டுநர்கள் குறைந்தபட்சமாக ரூ.2337/–ம், அதிகபட்சமாக ரூ.3500/–ம் சம்பள விகிதங்களில் கூடுதலாக பெறுவர் எனவும், தற்போது தொகுப்பூதியம் பெற்று வரும் விற்பனையாளர் ஒருவர் கூடுதலாக மாதமொன்றுக்கு ரூ.6400/–ம் கட்டுநர் ஒருவர் ரூ.6100/–ம் பெறுவர் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இப்பரிந்துரையினை செயல்படுத்துவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய உத்தேச கூடுதல் செலவினம் ஒரு மாதத்திற்கு ரூ.9.17 கோடி என்றும் ஆண்டொண்டிற்கு செலவினம் ரூ.110.07 கோடி என்றும் குறிப்பிட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு ஊதிய மறு சீரமைப்பு செய்திட அரசாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:–

அ) <u>விற்பனையாளர்களுக்கான காலமுறைஊதியம் மற்றும் தொகுப்பூதியம்</u> கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்த ஒரு வருடம் மட்டும் தொகுப்பூதியம் வழங்கப்படும். விற்பனையாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகுப்பூதியமான ரூ.5000/– என்பதிலிருந்து பதிலாக ரூ.6250/– ஆகவும், கட்டுநர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகுப்பூதியமான ரூ.4250/– என்பதிலிருந்துரூ.5500/– ஆகவும் மாற்றியமைத்து வழங்கப்படும். ஓராண்டு பணி முடித்த விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கு பின்வரும் காலமுறை ஊதியம் வழங்கப்படும்.

விற்பனையாளர்கள்– ரூ.8600 – ரூ.29000/–

கட்டுநர்கள் – ரூ.7800 – ரூ.26000/–

பணியில் ஓராண்டு முடித்தோருக்கு, தற்போதுள்ள அடிப்படை ஊதியத்துடன் 100% அகவிலைப்படியினை சேர்த்து வரும் கூடுதலுக்கு 5% ஊதிய உயர்வு வழங்கி, தொகையினைஅடுத்த 10 ரூபாய்க்கு முழுமையாக்கி புதிய அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

ஆ. அகவிலைப்படி புதிய அடிப்படை ஊதியத்தில் 14 % அகவிலைப்படி வழங்கப்படும்.

இ. <u>ஆண்டு ஊதிய உயர்வு</u>

ஆண்டு ஊதிய உயர்வு அடிப்படை ஊதியத்தில் 2.5 சதவீதிலிருந்து 3 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

ஈ. வீட்டு வாடகைப்படி

வீட்டு வாடகைப்படி அடிப்படை ஊதியத்தில் 10சதவீதம் (அல்லது) சென்னை மாநகராட்சிக்குள் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு முறையே ரூ.1200/— மற்றும் ரூ.1000/— இவற்றில் எது குறைவோ அது வழங்கப்படும். இதர பகுதிகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 10% (அல்லது) முறையே ரூ.1000/— மற்றும் ரூ.800/— இவற்றில் எது குறைவோ அது வழங்கப்படும்.

உ. நகர ஈட்டுப்படி

அடிப்படை ஊதியத்தில் 5 சதவீதம் (அல்லது) சென்னை மாநகராட்சிக்குள் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு முறையே ரூ.600/— மற்றும் ரூ.500/— இவற்றில் எது குறைவோ அதனை வழங்கலாம். இதர மாநகராட்சிகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 4% (அல்லது) முறையே ரூ.500/— மற்றும் ரூ.400/— இவற்றில் எது குறைவோ அது வழங்கப்படும்.

ஊ. மருத்துவப்படி

விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு முறையே ரூ.300/— வழங்கப்படும்.

எ. நியாய விலைக் கடைப் படி :

விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கேற்ப கீழ்க்காணும்படி வழங்கப்படும்.

| குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | உயர்த்தப்பட்ட நியாயவிலைக்கடைப்படி | |
|---|---|---|
| | விற்பனையாளர்கள் | கட்டுனர்கள் |
| 1000 அட்டைகள் மற்றும் அதற்கும் கீழ் | ரூ.1000/— | ரூ.500/— |
| 1001 அட்டைகள் முதல் 1500 அட்டைகள் வரை | தற்போது உள்ள நியாயவிலைக் கடைப்படியில் 10% கூடுதல். | |
| 1501 அட்டைகள் மற்றும் அதற்கும் மேல் | தற்போது உள்ள நியாயவிலைக் கடைப்படியில் 25% கூடுதல். | |

ஏ. மலைவாழ்ப்படி மற்றும் குளிர்காலப்படி

அரசால் மலைவாழ்ப்பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மலைவாழ்ப்படி அடிப்படை ஊதியத்தில் 20 சதவீதம் அல்லது அதிகபட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.1500/— மற்றும் குளிர்காலப்படி அடிப்படை ஊதியத்தில் 5 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.400/— வழங்கப்படும். குளிர்க்காலப்படியினை குளிர்காலங்களில் மட்டுமே வழங்கப்படும்.

ஐ. மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்துப்படி

மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்துப்படி தற்போதுள்ளவாறு ரூ.2500/— வழங்கப்படும்.

ஒ. தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம்

ஒரே பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு தேர்வுநிலையும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு சிறப்புநிலையும் வழங்கி தலா ஒரு ஊதிய உயர்வு (3சதவீதம்) வழங்கப்படும். ஒரே பதவியில் 30 ஆண்டு பணி முடித்த பணியாளர்களுக்கு சிறப்பு ஊதிய உயர்வாக (3சதவீதம்) ஒரு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

ஓ.புதிய ஊதிய விகிதம் அமுல்படுத்துதல்

திருத்தப்பட்ட ஊதிய விகிதங்களை அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தி அதன் பணப்பயன் வழங்கப்படும். புதிய ஊதிய விகிதத்தினை அமல்படுத்துவதனால் ஏற்படும் செலவினத்தை கூட்டுறவுத்துறையே ஏற்க வேண்டும்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.9489/JS(KP)2021 நாள்.22.02.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர் ( A&E) , சென்னை–18.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (உணவு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9
நிதி (வ.செ.பொ–II/கூ.உ (ம) நு,பா) துறை, சென்னை–9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்) துறை, சென்னை–9
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.